பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 21 வியாழக்கிழமை 05.01.2023 கதிர் 311

# லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு



லிட்ரோ சமையல் எரிவாயு விலை இன்று முதல் குறைக்கப் பட்டுள்ளது.

இதன்படி, 12.5 கிலோகிராம் 2

# உப்புச்சப்பற்ற தீர்வை ஒருபோதும் ஏற்கோம்

## சம்பந்தன் திட்டவட்டம்



இலங்கையில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை விரைந்து காண வேண்டும். அது வலுவான – நிரந்தர தீர்வாக இருக்க இருக்க வேண்டும். உப்புச் சப்பற்ற தீர்வை நாம் ஒரு போதும் ஏற்கமாட்டோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இன்று மாலை சந்திக்கும் போது வலியுறுத்தவுள்ளேன். 8

# விபத்தில் சிக்கிய உத்தியோகத்தர் சிகிச்சை பயனின்றி பரிதாபச் சாவு



யாழ்., வடமராட்சி கிழக்கில் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை காலை வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக் கேணியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த கொடுக்கிளாயைச் 2

# திருக்கோவிலில் யானை தாக்கி குடும்பஸ்தர் பரிதாப உயிரிழப்பு



அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள உடும்பன்குளம் பகுதியில் வயலில் காவல் காத்து வந்த விவசாயி ஒருவர் இன்று அதிகாலை யானை தாக்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கவேலாயுதபுரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சசிகரன் (வயது 38) என்பவரே 2

# சகல தமிழ்க் கட்சியினரும் ஓரணியில் திரளவேண்டும்

## நெடுங்கேணியில் மக்கள் போராட்டம்




(வவுனியா நிருபர்)

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை 2

# வசந்த முதலிகேவுக்கு விளக்கமறியல் நீடிப்பு



அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

வசந்த முதலிகே இன்று கொழும்பு – கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போதே அவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# தமிழர்களை ஏமாற்ற கூட்டு நரித் தந்திரம்

## கூட்டமைப்புக்குத் திராணி இல்லை; அருட்தந்தை சத்திவேல் குற்றச்சாட்டு



சம்பந்தன் தலைமையிலான குழுவினர் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுகின்றார்கள் என்றால் தமிழர்களின் குரலாக, அரசியல் அபிலாஷைகளின் இலக்கோடு பங்குபற்ற வேண்டும். அதற்கான கலந்துரையாடல்களை மக்கள் மத்தியில் நடத்த வேண்டும். ஆனால், அதற்கான திராணி தமிழ்த் தேசியக் 8

# இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 6 இலட்சம் போதை மாத்திரைகள்

## கைப்பற்றினர் தமிழகப் பொலிஸார்



(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 6 இலட்சம் போதை மாத்திரைகள் தமிழகத்தில் இன்று காலை கைப்பற்றப் பட்டுள்ளன.

தமிழகத்தின் வேதாளைப் பகுதியில் இருந்து 2

# பதவி விலகல் கடிதத்தை மீள வழங்கி பாதீட்டை நிறைவேற்ற அனுமதியோம்

## ஆளுநரின் செயலரிடம் ஐ.தே.க. சுட்டிக்காட்டு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வழங்கிய பதவி விலகல் கடிதத்தை மீள வழங்கி அவர் மூலம் மீண்டும் பாதீட்டை நிறைவேற்றுவதை ஏற்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஆளுநரின் செயலாளரிடம் தெரிவித்தோம் என அக்கட்சியின் மாநகர சபை உறுப்பினர் சி.குலேந்திரராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வி.மணிவண்ணன் கடந்த மாதம் 30 ஆம் திகதி யன்று பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார். இதை யடுத்து சபை உறுப்பினர்களை கட்சி ரீதியில் சந்திக்க ஆளுநர் ஏற்பாடு செய்தார். 2

# தமிழ்க் கட்சிகளின் ஒருங்கிணைப்பு வேண்டி திருமலையிலும் போராட்டம்






வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்துக்கு முன்பாக பேரணி ஒன்று இடம்பெற்றது. 2

# மட்டக்களப்பில் பட்டப்பகலில் 45 பவுண் நகைகள் திருட்டு!



மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி – முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள வீடொன்றில் பவுண் நகைகள், பணம் திருடப்பட்டுள்ளன.

ஆசிரியர்களாகப் பணியாற்றும் 2

## மட்டக்களப்பில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணவன், மனைவி இருவரும் பாடசாலைகளுக்குச் சென்ற நேரத்திலேயே, இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பகல் வேளையில் வீட்டின் கூரை வழியாக உட்புகுந்த திருடர்கள், அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 45 பவுண்களுக்குமேலானநகைகளையும், இரண்டு 2 இலட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருக்கோவிலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு உயிரிழந்தார். குறித்த நபர் வழமை போல் நேற்றிரவு வயல் காவலுக்காகச் சென்ற நிலையில் இன்று அதிகாலை 2 மணியளவில் யானை தாக்கி சம்பவ இடத்திலேயே பலியானார்.

## விபத்தில் சிக்கிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த யோகச்சந்திரன் பிரகலாதன் (வயது - 41) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இவர் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றியவராவார்.

இவர் பயணித்த மோட்டார் சைக்கிளும், மற்றொரு மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றிருந்தது.

விபத்தில்மோட்டார்சைக்கிள்களைச் செலுத்தி வந்த இருவரும் படுகாயமடைந்தனர்.

பிரகலாதன் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந் நிலையில், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

## சகல தமிழ்க் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் இணைய வேண்டும் எனக் கோரி வவுனியா – நெடுங்கேணியில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நெடுங்கேணி நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகாமையில் வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தமிழ் அரசியல் கட்சிகளிடையே அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகள் ஒருமித்த முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும், அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு–கிழக்கு தனி மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை மக்கள் ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கைகள்அடங்கியமகஜர்ஊடகங்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது.

## தமிழ்க் கட்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பபெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டிய பதாதைகளுடனான பேரணியே முன்னெடுக்கப்பட்டது.

இதில் பொதுமக்கள் மற்றும் ஏற்பாட்டுக் குழுவின் அங்கத்துவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## பதவி விலகல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய மாநகர சபையின் 45 உறுப்பினர்களில் 9 பேர் மட்டும் இன்று ஆளுநர் செயலகத்துக்குச் சென்றனர்.

இவ்வாறு சென்றவர்களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பிலான மூவர் சபைக்கு மீண்டும் புதிய மேயர் தேர்வு இடம்பெற வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என எழுத்தில் வழங்கிவிட்டு கூட்டத்தில் பங்கேற்காது வெளியேறினர் எனத் தெரிவித்தனர்.

இதேநேரம் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் மணிவண்ணன் சார்பிலான அணியைச் சேர்ந்தோர் மாநகர மேயர் சமர்ப்பித்த பதவி விலகல் கடிதத்தை மீளப் பெற்றுக்கொள்வார் எனவும், மீண்டும் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் தருமாறும் கோரியதோடு மாறாக புதிய மேயர் தேர்வுக்குச் சென்றால் நீதிமன்றை நாடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஐ.தே.கவின் உறுப்பிர் சார்பில் சி.குலேந்திரராஜா ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதேநேரம் இது தொடர்பில் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனிடம் கேட்டபோது,

தேர்தல் கட்டளைச் சட்டத்தின் பிரக ாரம் புதிய மேயர் தேர்வுக்கு இடமில்லை. அதனால் 3 ஆவது மேயர் தேர்வு செய்ய முடியாது. மேயர் இல்லாதுவிடின் சபையை கலைப்பது ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டது. அதற்கு நாம் உடன்படுகின்றோம்.

இதேநேரம் ஆளிநர் ஒரு கருத்தைக் கூறியுள்ளார். அதாவது ஜனாநாயக வழியிலான சபை தொடர்ந்தும் இடம்பெற வேண்டும் என விரும்புவதாக. அவ்வாறானால் மேயரின் பதவி விலகலை தான் ஏற்கவில்லை எனவும், இரண்டாவது தடவை பாதீட்டை சபையில் சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் கூறினால் அதனை நிறைவேற்றலாம் எனக் கூறியுள்ளோம் – என்றார்.

## லிற்ரோ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 201 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 4 ஆயிரத்து 409 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 80 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,770 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2.3 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயுவின்விலை 38 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 822 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகு மூலம் இலங்கைக்கு கடத்த முற்பட்ட சமயம் தமிழகப் பொலிஸாரால் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்தைச் சுற்றிவளைத்த வேளை சந்தேகநபர்கள் தப்பியோடிவிட்டனர். இருந்தபோதும் 6 இலட்சம் போதை மாத் திரைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேநேரம் தடயப் பொருட்களைக் கைப்கற்றிய பொலிஸார் சந்தேக நபர்களைத் தேடி வருகின்றனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மாத்திரைகளின்பெறுமதி இந்தியநாணயத்தில் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபா எனப் தமிழகப் பொலிஸார் தெரிவிப்பதால் இலங்கை நாணயத்தில் 5 கோடி ரூபா எனக் கணக்கிடப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## விசனம் தரும் உண்மைகள்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசுத் தரப்புக்கும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் இன்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் உத்தியோகப்பற்றற்ற சந்திப்பு இடம் பெற இருக்கின்றது.

வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில், கட்சித் தலைவர்கள் இடையேயான, மரதன் தொடர் கூட்டம் நான்கு நாள்களுக்கு நடக்க இருப்பது தெரிந்ததே. அதற்கான முன்னாயத்தக் கூட்டம்தான் இன்று மாலை உத்தியோகப்பற்றற்ற முறையில் நடைபெறுகின்றது.

அந்த நான்கு நாள் மரதன் அமர்வுகளுக்கான பூர்வாங்க நிகழ்ச்சி நிரல் இன்று ஓரளவுக்கு முடிவு செய்யப்பட்டு விடும் எனக் கருதப்படுகிறது.

அந்தப் பூர்வாங்க நிகழ்ச்சி நிரலை நோக்கினால், இப்போதைய சமரச முயற்சிகளில் தீர்வுக்கான நகர்வுகள் எத்தகையனவாக – எந்த மார்க் கத்தில் – அமையும் என்பதை ஓரளவு அறிய அல்லது ஊகிக்கக் கூடியதாக இருக்கும்.

வரும் பத்தாம் திகதி முதல் நடைபெறும் நான்கு நாள் கூட்டத்தில், கடந்த ஏழரை தசாப்தங்களாக இழுபடும் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு கண்டாகிவிடும் என நம்புவதற்கு இடமில்லை. ஆனாலும் எந்த மார்க்கத்தில் – வழியில் – தீர்வை அடையலாம் என்பதற்கான ஒரு சாலை வரைபடத்தையாவது இந்த நான்கு நாள்களில் எட்ட முடியும். ஆனால் அதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகளில் இணக்கமான முன் முயற்சிகள் அவசியம்.

மனம் உண்டானால் இடமுண்டு. இணக்கம் இருந்தால் வழி பிறக்கும்.

சிறுபான்மையினருக்கு நீதி செய்யும் விதத்திலான – நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடியதான – தீர்வுக்கு இணங்கும் தாராளமும், விட்டுக் கொடுப்பும் தென்னிலங்கைத் தரப்புகளுக்கு – குறிப்பாக பௌத்த, சிங்களப் பேரினவாதத் தரப்புகளுக்கு – இருந்தால் மட்டுமே தீர்வுக்கான மார்க்கத்தை இந்த நான்கு நாள் கூட்டத் தொடரில் எட்டக் கூடியதாக இருக்கும்.

இந்த சமரச முயற்சிகளுக்கு வர முன்னர், பரஸ்பரம் நம்பிக்கையை ஏற்படுத்தும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து, தீர்வுக்கான நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் எனத் தமிழர் தரப்பு ஜனாதிபதியிடம் விநயமாக கோரிக்கை முன்வைத்தன என்பதும் தெரிந்ததே. அவை கோரிக்கைகளே தவிர, பேச்சுக்கான முன் நிபந்தனைகள் அல்ல.

அரசியல் கைதிகள் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தமிழர்கள் மீது ஏவிவிடுவதைக் கைவிடுதல், போன்ற அம்சங்கள் தொட்டுக் காட்டப்பட்டன.

ஆனால் அவை எவை குறித்தும் அரசுத் தரப்பிடமிருந்தோ, ஜனாதிபதியிடமிருந்தோ இன்னும் ஆக்கபூர்வமான பிரதிபலிப்புகள் வரவேயில்லை என்பதுதான் விசனம் தரும் உண்மையாகும்.

# இயற்கை விவசாய வார நிகழ்வுகள்!







‘புதிய வெளிச்சம்’ ஒழுங்கமைப்பில், இந்த வருட இயற்கை விவசாய வார நிகழ்வாக, இயற்கை வழி விவசாயப் பயிற்சிப் பட்டறைகள், மலையகம், கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம் பகுதிகளில் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் இயற்கை வேளாண் விஞ்ஞானி சுந்தரராமன், இயற்கை வேளாண் விஞ்ஞானி பாமயன் மற்றும் யூடியுப் ‘சீர்காழி டிவி’ (sirkali tv) இயற்கை விவசாயப் பயிற்றுநர் ராஜசேகர் மற்றும் சிங்கள மொழியிலான யூடியுப், ‘அக்ரிகல்ட்சர் நிஹால் ரணசிங்க’ (agriculture nihal ranasinghe) இயற்கை விவசாயப் பயிற்றுநர் நிஹால் ரணசிங்க ஆகியோரை வளவாளர்களாகக் கொண்டு, கடந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதியன்று, ஹற்றனில் நடைபெற்றது.

ஹற்றனில் நடைபெற்ற நிகழ்வில் அறுநூறுபேர் வரையிலானோர் பங்குபற்றினர். இந்த வருடம் ஜனவரி 2 ஆம் திகதி நுவரெலியாவில் இடம்பெற்ற நிகழ்வில் முந்நூறு பேர் வரையிலானோரும், 3 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வில் முந்நூறு பேர் வரையிலானோரும் பங்குபற்றியிருந்தனர். கடந்த வருடம் புதிய வெளிச்சத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களிடையேயான அக்ரிஸ்டார் யுபசஷ் ளவயச வீட்டுத் தோட்டப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பண வெகுமதியும் புதிய வெளிச்சம் நிறுவுநர் அனந்தராஜ் நவஜீவன் அவர்களால் நுவரெலியாவில் வழங்கப்பட்டன. மேலும், மட்டக்களப்பு பொதுசன நூலகத்துக்கு இயற்கை விவசாயம் தொடர்பான, ஒரு தொகுதி நூல்கள் முதற்கட்டமாக வழங்கப்பட்டன.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம், கிளிநொச்சியில், புதிய வெளிச்சத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இயற்கை விவசாயம் தொடர்பான, நிகழ்வுகள் இடம் பெற்றன.

எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் இயற்கை விவசாயம் தொடர்பான வதிவிடப் பயிற்சி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

2018 ஆம் ஆண்டு, புதிய வெளிச்சத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு, பேராசிரியர் சிறிஸ்கந்தராஜா தலைமையில், வட மாகாணத்தில் இடம்பெற்ற, இயற்கை விவசாய விழிப்புணர்வு நிகழ்வுகளைத் தொடர்ந்து, ‘இயற்கை வழி இயக்கம்’ என்ற தன்னார்வ அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன்பின் வருடந்தோறும், வருட முதல் வாரத்தை உள்ளடக்கியதாக, இயற்கை விவசாய வார நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இந்த முறை வடக்கிற்கு வெளியே மலையகம் மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் புதிய வெளிச்சம் தனது இயற்கை விவசாய விழிப்புணர்வு நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# பணத்துக்காகச் சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றத்தில் 12 பேர் பண்டாரகமவில் கைது!

பண்டாரகம, பொல்கொட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டனர் என பண்டாரகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

15 ஆயிரம் ரூபா பணமும் இவர்களிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பண்டாரகம பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் துூர டி சில்வாவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பண்டாரகம பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

# யாசகம் பெறுபவர்கள் நாளாந்தம் 7 ஆயிரம் ரூபா வரை வருமானத்தைப் பெறுகின்றனர்?

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் யாசகம் பெறுபவர்கள் நாளாந்தம் 7 ஆயிரம் ரூபா வரை வருமானம் பெறுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நாளாந்தம் காலை முதல் மாலை வரை யாசகம் பெறும் இவர்கள், இரவில் சுகபோக வாழ்க்கை வாழ்கின்றனர் எனவும், நட்சத்திர தரத்திலான ஹோட்டல்களில் கூட உணவு உண்கின்றனர் எனவும் தெரியவந்துள்ளது.

பிரதான வர்த்தக நிலையங்களுக்கு தேவையான இருபது ரூபா, ஐம்பது ரூபா, 100 ரூபா போன்ற நாணயத்தாள்களை யாசகர்களே வழங்கிவருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன், யாசகத்தை பிரதான தொழிலாகக் கொண்டு செயற்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இஸ்ரேலிய இராணுவத்தின் சூட்டில் 15 வயது பாலஸ்தீனச் சிறுவன் பலி!



ஜெருசலேம், ஜன.05

இஸ்ரேல் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வைத்திருக்கும் மேற்குகரை பகுதியில் பெத்லகேம் நகர் அமைந்துள்ளது. அங்கு பாலஸ்தீன அகதிகள் முகாம்கள் ஏராள மாக உள்ளன. இந்த முகாம்களில் பாலஸ்தீன பயங்கரவாதிகள் மறைந்து இருக்கின்றனர் எனத் தெரிவித்து இஸ்ரேல் இராணுவம் அவ்வப்போது அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று பெத்லகேம் நகரில் உள்ள பாலஸ்தீன அகதிகள் முகாம் ஒன்றில் இஸ்ரேல் இராணுவ வீரர்கள் வழக்கம் போல் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதற்கு அங்கிருந்த பாலஸ்தீன இளைஞர்கள் எதிர்ப்புத்தெரிவித்தமையால் இருதரப்புகளுக்கும் இடையே மோதல் வெடித்தது. அதைத் தொடர்ந்து இஸ்ரேல் இராணுவ வீரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் அகதிகள் முகாமில் இருந்த 15 வயது சிறுவனின் உட லில் குண்டு துளைத்ததுடன் அவன் ரத்த

வெள்ளத்தில் சரிந்து துடிதுடித்து இறந்துள் ளான் என்றுப்தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் இராணுவத்தின் இந்த வெறிச்செயலுக்கு பாலஸ்தீன அரசு கடும் கண்டனம்

தெரிவித்துள்ளது. இது தங்கள் நாட்டின் சிறுவர்களுக்கு எதிரான இஸ்ரேல் இராணுவத் தின் கொடிய குற்றம் என பாஸ்தீன வெளியு றவு அமைச்சம் குற்றஞ்சாட்டியுள்ளது. அதே சமயம் பாலஸ்தீன எதிர்ப்பாளர்கள் இராணு வத்தினர் மீது நெருப்பு வைக்கப்பட்ட கண்ணாடி போத்தல்களை வீசினர் எனவும், அதன்பிற கேவ்துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் இஸ் ரேல் இராணுவம் விளக்கமளித்துள்ள தாகக் கூறப்படுகின்றது.

## கர்ப்பிணியான எம்.பியை எட்டியுதைத்தனராம் சக எம்.பிகள் இருவருக்குச் சிறைத் தண்டனை

### செனகல் நாட்டில் சம்பவம்



தக்கார், ஜன.05

செனகல் நாட்டில் கர்ப்பிணியான எம்.பியை எட்டியுதைத்த சக எம்.பிகள் இருவருக்குச் சிறைத் தண்டனை தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆப்பிரிக்க நாடான செனகல் நாட்டின் நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் முதல் திகதியில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது பட்ஜெட் தொடர்பாக ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கை கலப்பாக மாறியது.

ஆளும்கட்சியை சேர்ந்த பெண் எம்.பி.யான ஆமி என்டியாயோ கினிபியை, எதிர்க்கட்சியை சேர்ந்த மசாதா சாம்ப் என்ற எம்.பி. கன்னத்தில் பளார் என அறைந்தார். இதனால் ஆத்திரமடைந்த கினிபி, மசாதா மீது நற்காலியை வீசி எறிந்தார்.

அப்போது மசாதாவும், எதிர்க்கட்சியை சேர்ந்த மற்றொரு எம்.பி.யான மாமடோவ் நியாங்கும் கினிபியின் வயிற்றில் எட்டி உதைத்தனர். இந்த சம்பவம் நடந்த சமயத்தில் கினிபி கர்ப்பமாக இருந்தார் எனக் கூறப்படுகிறது. இந்த நிலையில் தன்னை கண்மூடித்தனமாக தாக்கிய சக எம்.பி.க் கள் மீது கினிபி வழக்கு தொடர்ந்தார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை அந்த நாட்டின் தலைநகர் தக்கார் நீதிமன்றில் நடந்து வந்ததது.

நேற்று இறுதி விசாரணை நடந்தபோது, ம சாதா மற்றும் நியாங் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கூறி நீதிமன்றம் அவர்களைக் குற்றவாளியாக அறிவித்தது. அப்போது கினிபி சார்பில்ஆஜரான வக்கீல், குற்றவாளிகள் இருவருக்கும் தலா 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்க வேண்டும் என நீதிபதிகளை வலியுறுத்தினார்.

அதை ஏற்க மறுத்தவ்நீதிபதிகள் இருவருக்கும் தலா 6 மாதம் சிறை தண்டனை விதித்து தீர்ப்புஅளித்தமை குறிப்பிடத்தக்கது.






## 2023 புது வருடம் பிறந்து 3 நாள்களுக்குள் அமெரிக்காவில் 130 பேர் சுட்டுக் கொலை!

வொஷிங்டன், ஜன.05

அமெரிக்காவில் சமீப ஆண்டுகளாகவே துப்பாக்கிஜ் கலாசாரம் பெருகி வருகிறது. அங்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடக்காத நாளே கிடையாது என்கிற அளவுக்கு நிலைமை மோசமாகி இருக்கிறது. அதிலும் குறிப்பாக 'மாஸ் சூட்டிங்'என்று அழைக்கப்படும் அதிக உயிர்பலிகளை ஏற்படுத்துகின்ற துப்பாக்கிச்சூடு சம்பங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் இந்த ஆண்டு தொடங்கிய முதல் 3 நாள்களில் மட்டும் அமெரிக்கா முழுவதும் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்க ளில் 130 க்கும் அதிகமானோர் பலியாகினர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. அமெரிக்காவில் நடக்குமப்துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களைக் கண்காணிக்கும் துப்பாக்கி வன்முறை ஆவணக் காப்பகம் என்கிற அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், இந்த ஆண்டு தொடங்கியதில் இருந்து, 2 குழந்தைகள் மற்றும் 11 சிறுவர்கள் உள்பட 131 பேர் துப்பாக்கியால் தற்செயலாக அல்லது வேண்டுமென்றே கொல்லப்பட்டுள்ளனர். அதேபோல் 3 குழந்தை கள் மற்றும் 34 சிறுவர்கள் உள்பட 313 பேர் காயமடைந்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்க ஜனாதிபதி – ஜப்பான் பிரதமர் வெள்ளை மாளிகையில் 13 இல் சந்திப்பு



வொஷிங்டன், ஜன.05

ஆசிய நாடுகளில் ஒன்றான ஜப்பான், தென்கொரியா, அமெரிக்காவுடன் நட்பு ரீதியிலான தொடர்பு கொண்டுள்ளது. எனினும், மறுபுறம் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளான தென்கொரியா மற்றும் ஜப்பானை அச்சுறுத்தும் வகை யில் வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்தச் சூழலில், அமெரிக்க அதிபர் பைடனை வெள்ளை மாளிகையில் வைத்து ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா வருகிற 13 ஆம் திகதி நேரில் சந்தித்து பேசவுள்ளார் எனக் கூறப்படுகின்றது. இதனையொட்டி, வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கை யில்– ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடாவின் வருகையை அதிபர் பைடன் எதிர்நோக்கிக் காத்து இருக்கிறார்.

இந்தச் சந்திப்பில் எங்களுடைய இரு அரசாங்கங்கள், பொருளாதார விவகாரங் கள் மற்றும் நாட்டு மக்களின் உறவுகளை ஆழப்படுத்துவதற்கான ஆலோசனைகளை நடத்த உள்ளனர்.

இந்தச் சந்திப்பில் இரு தலைவர்களும், சர்வதேச அளவில் நிலவி வரும் பருவநிலை மாற்றம், வடகொரியா, சீனாவை சுற்றி நிலவும் பாதுகாப்புத் தொடர்புடைய விவகாரங்கள், உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு உள்ளிட்ட விவகாரங்கள் பற்றி ஆலோசனை நடத்த உள்ளனர். என்று அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# டெல்லியில் கடும் குளிர்; மக்கள் பேரவதி அடுத்த மூன்று நாள்களுக்குத் தொடரும்



புதுடெல்லி, ஜன.05

டெல்லியில் இன்றைய காலை பொழுது கடுமையான குளிராகஜ் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. நேற்று முன்தினம் 8 டிகிரியாக இருந்த வெப்பநிலை நேற்று அதி காலை 4.4 டிகிரியாக சரிந்தது. சில இடங்களில் 4 டிகிரிக்கும் கீழே இருந்தது. ஒரே நாளில் இப்படி குறைந்த வெப்பநிலையால் மக்கள் பல இன்னல்களைச் சந்தித்தனர் என்று கூறப்படுகின்றது.

நள்ளிரவு முதல் விடிய விடிய இடைவிடாத பனிப்பொழிவு மற்றும் காற்றின் காரண மாக குளிர் அதிகரித்துள்ளது. டெல்லியின் இந்த வெப்பநிலை இமாச்சல பிரதேசத்தின் தர்மசாலாவில் கூட இல்லை என்றும், அதைப்போல இமயமலையின் அடிவாரம ான உத்தரகாண்ட் மாநிலத்தின் டேராடூன் மற்றும் நைனிடாலிலும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தர்மசாலாவில் 5.2 டிகிரியும், நைனிடா லில் 6 டிகிரியும், டேராடூனில் 4.5 டிகிரியும் வெப்ப நிலை பதிவாகியுள்ளது.

பனி மூடிய இமயமலையில் இருந்து, உறைபனிக் காற்றுக் கிளம்பி டெல்லியை நடுங்க வைத்துவிட்டதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்தனர். கங்கை சம வெளிகள் மற்றும் அதை ஒட்டிய மத்திய மற் றும் கிழக்கு பகுதிகளில் அடர்த்தியான மூடு பனியைக் காட்டும் செயற்கைக்கோள் படங்களையும் அவர்கள் பகிர்ந்துள்ள னர்.

இந்தப் பனிக்காற்று, பனிப்பொழிவு காரணமாக தரைவழி மற்றும் ஆகாயவழி போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. டெல்லிக்கு சுமார் 20 ரயில்கள் நாலரை மணி நேரம் தாமதமாக வந்துள்ளன. இதைப்போல டெல்லியில் இருந்து கிளம்பிய ரயில்களும் தாமதமாக கிளம்பியுள்ளன. இந்த குளிரின் நிலை அடுத்த 3 நாள்களில் மேலும் குறையும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## சீனாவில் பரவும் 'பி.எவ்.–7' திரிவு ரகம் கொரோனா இந்தியாவிலும் பரவியது!



பெங்களூர்,ஜன.05

கர்நாடகத்தில் நேற்று 13 ஆயிரத்து 201 கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன.

இதில் 34 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதில் பெங்களூர் நகரில் 24 பேருக்கும், கோலாரில் 3 பேருக்கும், சித்ரதுர்கா, ஹாசன், மண்டியா, உடுப்பி, உத்தரகன்னடா, ராய்ச்சூர், பெலகாவியில் தலா ஒருவருக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், தற்போது 309 பேர் மருத்துவ சிகிச்சையில் உள்ளனர்.

கொரோனா பாதிப்பு விகிதம் ஒன்றுக்கும் கீழ் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சீனா மற்றும் அமெரிக்காவில் வேகம ாக பரவும் 'பி.எவ்.–7' என்ற புதிய வகை கொரோனா இந்தியாவிலும் பரவியுள்ளது.

அதாவது குஜராத், ராஜஸ் தானில் அந்தப் புதிய வகை திரிவு வைரஸ் பரவல் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலையில் கர்நாடகத்திலும் ஒருவருக்கு இந்தப் புதிய வகை கொரோனா பாதிப்பு உறுதிசெய்யப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அது 'எக்ஸ்.பி.பி.1.5' வகையை சேர்ந்தது என்று தெரியவந்துள்ளது.

இந்தத் தகவலைக் கர்நாடக சுகாதாரத்துறை இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த புதிய வகை கொரோனா வைரஸ் கர்நாடகத்தில் தீவிரமாக பரவி பாதிப்பை ஏற்படுத்தி விடுமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.



## ராகுல்காந்தி பாதயாத்திரையில் 3,122 கி.மீ. தூரம் கடந்துள்ளார்!

லக்னோ, ஜன.05

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை பாதயாத் திரை கிறிஸ்மஸ், புத்தாண்டு விடுமுறைக்கு பிறகு, நேற்று முன் தினம் மீண்டும் தொடங்கியது. டெல்லியில் இருந்து உத்தரபிரதேசத்துக்குள் யாத்திரை நுழைந்தது.

பாக்பட் அருகே மாவிகளன் கிராமத்தில் யாத்திரை முடித்துக் கொள்ளப்பட்டது. அதையடுத்து, ராகுல்காந்தியும், பிரியங்காவும் டெல்லி திரும்பினார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அவர்கள் டெல்லியில் இருந்து மாவிகளனுக்கு வந்து சேர்ந்தனர். உத்தரபிரதேசத்தில் 2 ஆவது நாள் யாத்திரை அங்கிருந்து தொடங்கியது. காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், மாநில காங்கிரஸ் தலைவர் பிரிஜ்லால் காப்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நடைபயணம், கன்னியாகுமரி முதல் டெல்லி செங்கோட்டை வரை 108 நாட்களில் 49 மாவட்டங்கள் வழியாக 3 ஆயிரத்து 122 கி.மீ. தூரம் கடந்திருப்பதாக காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

## திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்திய காதலியை உயிருடன் தீவைத்த காதலன்!

திருப்பூர், ஜன.05

திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத் திய காதலியை உயிருடன் தீவைத்துக் கொன்ற காதலன் பற்றிய செய்தி திருப்பூரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள பனப்பாளையம் பகுதியில் பெத் தாம்பாளையம் வீதியில் உள்ள காட்டுப்பகுதி யில் நேற்று மாலை உடலில் தீக்காயங்க ளுடன் 20 வயது மதிக்கத்தக்க ஒரு இளம்பெண் அலறியடித்து தன் மீது பெட்ரோல் ஊற்றி ஒருவர் தீ வைத்து விட்டதாகக் கூறி "காப்பாற்றுங்கள், காப் பாற்றுங்கள் என அலறியபடி பிரதான சாலைக்கு ஓடி வந்துள்ளார்.

இதை பார்த்து அந்த வழியே சென்ற வர்கள் அதிர்ச்சி அடைந்து பல்லடம் பொலிஸாருக்குத் தகவல் அளித்தனர். உடனே பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து அந்தப் பெண்ணை மீட்டு அம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதற்கிடையில் அந்த பெண்ணுக்கு தீ வைத்து விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்ல முயன்றவர் எனக் கூறப்படும் வாலிபரும் கீழே விழுந்து காயம் அடைந்தார். அவரையும் மீட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக் காக அனுப்பிவைத்தனர்.



பல்லடம் அரசு மருத்துவமனையில் அந்த பெண் ணுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அந்த சம்பவம் குறித்து பொலிசார் அந்த பெண்ணிடம் விசாரணை நடத்தினர்

விசாரணையில் வடமாநிலத்தைச் சேர்ந்த அந்தப் பெண் அவரது உறவினர் வீட்டில் தங்கி அங்குள்ள பனியன் நிறுவனத்திற்கு வேலைக்குச் சென்று வந்தார். வேலைக்குச் சென்ற இடத்தில் ராயர்பாளையத்தை சேர்ந்த இளைஞனுடன் காதல் ஏற்பட் டதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் இந்தப் பெண் தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி குறித்த இளைஞ னைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததார் எனத் தெரிகிறது. இதையடுத்து நேற்று இருவரும் பல்லடம் பனப்பாளையம் பகுதியில் பெத்தாம்பாளையம் ரோட்டில், சந்தித்து பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது தன்னைத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தியதால் ஆத் திரம் அடைந்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த பெட்ரோலை பெண் மீது ஊற்றி தீ வைத்தார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து அந்தப் பெண்ணுக்கு முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் கோவை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்ற நிலையில் குறித்த இளம்பெண் இன்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். பல்லடத்தில் இளம் பெண் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்து

உயிரோடு எரித்து கொல்ல முயன்ற சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கல்முனை மேம்பாட்டுக்கு மலேசியா ஒத்துழைக்கும்

## மலாக்கா மாநில ஆளுநர் அலி ருஸ்தாம் உறுதி







(எம்.எம்.அஸ்லம்)

கல்முனைப் பிராந்தியத்தின் முன்னேற்றத்திற்கு மலேசியாவின் ஒத்துழைப்பு பெற்றுத்தரப்படும் என அந்நாட்டின் மலாக்கா மாநில ஆளுநர் கலாநிதி துன் முஹமட் அலி ருஸ்தாம் உறுதியளித்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை மாலை, கல்முனை மாநகர சபைக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு, மாநகர முதல்வர், உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மலாக்கா ஆளுநருடன் மலேசிய பல்கலைக்கழக உபவேந்தர் போராசிரியர் அப்துர் ரஸ்ஸாக் பின் இப்றாஹிம், முன்னாள் கிழக்கு மாகாண சபையின் குழுத் தலைவரும் மலேசிய இஸ்லாமிய சர்வதேச செயலகத்தின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல், மலேசியத் தூதரக அதிகாரிகள் சிலரும் வருகை தந்திருந்தனர்.

இதன்போது ஆளுநர் மற்றும் தூதுக் குழுவினருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டதுடன் இரு தரப்பு புரிந்துணர்வு தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

அத்துடன் மலாக்கா ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாமின் கல்முனை விஜயத்திற்கு மதிப்பளித்து முதல்வரினால் விடே நினைவுச் சின்னம் ஒன்று வழங்கி வைக்கப்பட்டதுடன் மாநகர ஆணையாளரினால் அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இதே வேளை கல்முனை மாநகர முதல்வருக்கு சிறப்பு நினைவுச் சின்னம் மற்றும் பரிசு என்பவற்றை வழங்கி, மலாக்கா ஆளுநர் மகிழ்ச்சி பாராட்டினார்.

இங்கு உரையாற்றிய மலாக்கா ஆளுநர் –

பல்லின மக்கள் வாழ்கின்ற கல்முனைப் பிராந்தியத்தின் கல்வி, கலாசார, சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்கு தம்மால் முடியுமான உதவிகளைச் செய்வதற்குத் தாம் தயாராக இருக்கிறார் எனத் தெரிவித்தார்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு மலாக்கா மாநிலத்தில் உள்ள முன்னேறிய நகரம் ஒன்றும் கல்முனை மாநகரை புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் ஊடாக சகோதர நகரமாக இணைத்து, செயற்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு மேயர் எம்மிடம் முன்வைத்திருக்கின்ற கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்பதாகவும் ஆளுநர் கூறினார்.

இது சம்பந்தமாக பேசுவதற்கு மேயரை மலாக்காவுக்கு விஜயம் செய்யுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்ஸின் பக்கீர், மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ்.உமர் அலி, சட்டத்தரணி றொஷான் அக்தர், எம்.எம். நிஸார், எம்.எஸ்.எம்.ஹாரிஸ், சட்டத்தரணி ஆரிகா காரியப்பர், யூ.எஸ்.சபீனா, சர்மில் ஜஹான், எம்.ஐ.ரஜாப்தீன், எம்.ஏ.கலீலுர் ரஹ்மான், பி.மனோரஞ்சினி, மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், பொறியியலாளர் ஹலீம் ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஏ.றஹீம் உட்பட உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

# திருகோணமலை இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு நடைபவனி









(இரா.ரஜீந்திரமூர்த்தி)

திருகோணமலையின் பழம்பெருமை வாய்ந்ததும் தமிழர்களின் கலை, கலாசார விழுமியங்களை பிரதிபலித்து நிற்பதுமான திருகோணமலை இராம கிருஷ்ண மின் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரின் 125 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக கல்லூரின் முதல்வர் எஸ். பத்மசீலன் தலைமையில் இன்று ஜனவரி 05 காலை 7.30 மணிக்கு கல்லூரியின் மைதானத்தில் இருந்து கலை நிகழ்வுகளுடன் கூடிய நடைபவணி ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கிழக்குமாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத்தும், கௌரவ விருந்தினராக திருகோணமலை நகராட்சி மன்ற தலைவர் என்.இராசநாயகம், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எம்.எம். ஜவாத், பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# பாலம்போட்டாறில் சோளம் அறுவடை!

(ஹஸ்பர்)

திருகோணமலை, பாலம்போட்டாறு, பத்தினிபுரம் பகுதியில் சோளம் அறுவடை நிகழ்வு நேற்றைய தினம் இடம் பெற்றது.

சௌபாக்கியா உற்பத்திக் கிராமம் திட்டத்தின் கீழ் இடம் பெற்ற அறுவடை நிகழ்வில் அந்தப் பிரதேச தோட்டத் தொழில் உற்பத்தியாளர்களை தரிசு நிலங்களாக மாற விடாமல் பயிர்ச் செய்கையின் ஊடாக தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில்ம் அவர்களை ஊக்குவிக்கும் நோக்கோடு இந்தப் பணி இடம் பெற்றுள்ளது. உரிய விளைச்சல் கிடைக்கக் கூடிய வகையில் அறுவடை இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன். நிருவாக உத்தியோகத்தர் உடகெதர, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் நிகாத், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# நிதி திரட்டி தேர்தலை நடத்த ஆணைக்குழு தயார் எனில் நாமும் எதிர்கொள்ளத் தயார்!

## மனுஷ பகிரங்க அறிவிப்பு




அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் கொடுக்க நிதி இல்லை இந்த நேரத்தில் தேர்தல் நடாத்தப்பட வேண்டுமா? என்பதை தேர்தல் ஆணைக்குழு தீர் மானிக்கும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று (புதன்கிழமை) யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் தேர்தல் தொடர்பில் ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் தினம் தீர்மானிப்பது? தேர்தல் நடத்துவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது ? அல்லது தேர்தலுக்குரிய பணத்தினை எங்கே பெறுவது எனத் தீர்மானிப்பது தேசிய தேர்தல் ஆணைக்குழுவினுடைய கடமையாகும்.

ஆனால் தேர்தல் ஆணைக்குழு தேர்தல் என்று அறிவித்தால் தேர்தலுக்கு தயாராக இருக் கின்றோம். தற்பொழுது நாட்டை நடத்துவதற்கு பணம் இல்லை.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு கூட பணம் இல்லை. பாடசாலை மாணவர்களுக்கு தேவையான பாடசாலை சீருடை, பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்யக்கூட பணம் இல்லை.

அத்தியாவசிய பொருள்களின் விலை மற் றும் போக்குவரத்து சேவை மற்றும் ஏனைய செலவுகளை சமாளிப்பதற்குக் கூட நாட்டில் பணம் இல்லாத நிலை காணப்படுகிறது.

சீரமைக்க வேண்டிய பாதைகள் மற்றும் பழுதடைந்த பாதைகளைக் கூட திருத்த நிதி இல்லாத நிலையில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்பதைத் தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கும். தேர்தல் ஆணைக்குழு இவ்வாறான நிலையில் தேர்தலை நடாத்துவதற்கு தீர்மானித்து நிதியினை தேடி நடத்த தயாராக இருந்தால் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

அதனை நாங்கள் தீர்மானிக்க முடியாது தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானிக்க முடியும். - எனவும் தெரிவித்தார்.

## மருத்துவத்துறைக்கான முட்டை விநியோகம் முற்றாக நிறுத்தம்!

நாட்டின் மருத்துவத்துறைக்கான முட்டை விநியோகம் தற்போது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் மன்றம் தெரிவித்துள்ளது.

முட்டையின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதை அடுத்து விநியோகஸ்தர்கள் முட்டை வழங்குவதை நிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அரசாங்க வைத்தியசாலைகளிலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு வாரத்துக்கு 10 ஆயிரம் முட்டைகள், லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு வாரத்துக்கு 12 ஆயிரம் முட்டைகள் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அரசாங்கம் உடனடியாக முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும் அல்லது வைத்தியசாலைகளுக்கு முட்டை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்கவும் அமைச்சர் மஹிந்த அமரவீர கோரிக்கை!



தேர்தலுக்காக ஒதுக்கப்படும் நிதியை விவசாயத் துறை அமைச்சிற்கு வழங்குமாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கேட்டுக்கொண்டுள் ளார்.

இதன் மூலம் விவசாயிகளிடமிருந்து நியாயம ான விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய முடியும் என்றும் இதனால் விவசாயிகளின் பிரச்சினைகள் குறையும் என்றும் தெரிவித்துள் ளார்.

நிதி நெருக்கடியின் காரணமாக கடந்த அறு வடையின் போது விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் இம்முறை சிக்கல்கள் ஏற்படாத வகையில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங் கியுள்ளார். எனவே நெல் கொள்வனவிற்கு முன்னுரிமையளித்து, ஓரிரு மாதங்களுக்கு தேர்தலை காலம் தாழ்த்துவது ஏற்ற தீர்மானம் என்றும் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் கண்காட்சி யாழில்!



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25 மற்றும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள 'குளோக் கல் பெயார் 2023' கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனு நாணயக்காரவின் பங்கேற்புடன் நேற்று (புதன்கிழமை) யாழ்.ம ாவட்ட செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) முரளிதரன், யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன், யாழ்.ம ாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், யாழ்ப்பாண தலைமைப் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி, மாவட்ட செயலக அதிகாரிகள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச் சின் கீழ் வருகின்ற திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் உயர் அதி காரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கண்காட்சி மூலம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச் சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களையும், உள்ளூர் மற்றும் சர்வதேச வேலைவாய்ப்பு வழங்குநர்களையும் ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைப்பதுடன் அமைச்சால் வழங்கப்படும் சேவைகள், தொழிலாளர்களின் தொழிலாளர் மற்றும் நலன்புரி பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் தொடர்பான அனைத்து தகவல் களையும் பெறுவதற்கு இப்பகுதி மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

## சோலர் பனல் நிலையான மாற்றிகள் இன்வெர்ட்டர்கள் மீதான வரி நீக்கம்!

சோலர் பனல் நிலையான மாற்றிகள்ஃஇன்வெர்ட்டர்கள் மீதான துறைமுக மற்றும் விமான சேவை வரி நீக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த சேவை வரி நீக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். எரிசக்தி மற்றும் மின்சார நெருக்கடிக்கு தீர்வாக புதுப்பிக்கத் தக்க மின் உற்பத்தியை அதி கரிக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினர்களுக்கு அழைப்பு!

உள்ளூராட்சிமன்ற தேர்தலை எதிர்கொள்வது குறித்து ஆராய்வதற்காக இன்று (வியாழக்கிழமை) இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினர்கள் கட்சியின் தலைமையக மான சௌமியபவனில் ஒன்றுக்கூட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதற்கமைய ஜனவரி 1 முதல் 10 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக போட்டியிட விரும்புபவர்கள் தங்களது விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு இ.தொ.கா. கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பும னுக் கோரலுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அழைப்பு விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களின் எண்ணிக்கையை வகுப்பறைகளில் குறைக்க திட்டம்!

வகுப்பறையில் மாணவர் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் வகையில் புதிய சுற்றறிக்கை வெளியிட முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தரம் 1 முதல் 5 வரையான வகுப்பறைகளில் 40 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்கப்படக் கூடாது என்றும், தரம் 6 முதல் 11 வரை அதிகபட்சமாக 45 மாணவர்களை அனுமதிக்கலாம் என்றும் உள்ளது.

இதேவேளை, பாடசாலை மாணவர் சேர்க்கை நடைமுறையில் திருத்தம் மேற்கொள்ள கல்வி அமைச்சர் முன்மொழிந்துள்ளார்.

இதன்படி, தரம் 2 முதல் 11 வரையிலான பாடசாலை மாணவர் சேர்க்கை தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.

# பாடசாலை மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள்



நூருள் ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒவ் யங் சமூக சேவைகள் அமைப்பு 'மாணவர் மகிமை' வேலைத் திட்டத்தின் கீழ் பல்வேறு சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதற்கமையதேவையுடைய மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழனை இடம்பெற்றது

நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் ஐ.எம். நிஸ்மி தலைமையில் நிந்தவூர் அல் அஷ்ரக் கனிஷ்ட பாடசாலையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் தேவை யுடைய மாணவ, மாணவியர்களுக்கு மூக்கு கண்ணாடிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன இந்த நிகழ்வில் நிந்தவூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் எம் சரிபுத் தீன், பாடசாலை அதிபர் எம் ஹபீபுல் லாஹ், பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் செயலாளர் ஏ புஹாது ஆகியோர் கலந்து கொண்டு கண்ணாடிகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது

## தமிழர்களை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்புக்கு இல்லை. –இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினையைத் தன் காலத்தில் அதுவும் எதிர்வரும் 75 ஆவது சுதந்திர தினத்தோடு தீர்ப்பதற்கான திட்டத்தை அறிவிக்கப்போவதாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேச்சுவார்த்தையை ஆரம்பித்திருக்கை யில் அண்மையில் சம்பந்தனைச் சந்தித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது கட்சி அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் எனக் கூறியிருக்கின்றார். இது தமிழர்களை ஏமாற்றுவதற்கான கூட்டு நரி தந்திரச்செயற்பாடுஎன்பதைத்தமிழர்கள் அறிவர்.

இதற்கு மத்தியில் தோற்றாலும் வென்றாலும் நாங்கள் பேச்சுவார்த்தைகள் கலந்துகொள்வோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு நிற்பது நகைப்பை ஏற்படுத்துகின்றது.

இன்று இனப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகக் கூறும் ரணில் தலைமையிலான கட்சி அன்று சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாடாளுமன்றத்தில் முன்வைத்த தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்ற அமர்வின் போதே எரித்து நாடாளுமன்றத்தை அசிங்கப்படுத்தியது. இந்தக் கட்சியினரே யுத்த அழிவுக்கும் அடித்தளமிட்டார்கள். இனப் படுகொலையை நடத்தி யுத்த வெற்றியென மார்தட்டும் மகிந்த 13 பிளஸ் என உலகையே ஏமாற்றியதையும் நாம் அறிவோம்.

தொடர்ந்து நல்லாட்சி அரசு என மேடைக்கு வந்தவர்கள் நிலைமாறு கால நீதி என ஏமாற்றினர். அடுத்ததாகப் பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ச நாட்டில் இனப் பிரச்சினை என்று ஒன்று இல்லை. இருப்பது பொருளாதார மற்றும் அபிவிருத்திப் பிரச்சினையே என்றார். அதற்கெல்லாம் கைதட்டியவர்கள், கொடி தூக்கியவர்கள்தற்போது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என வந்து நிற்பது தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள அக்கறை அல்ல. தங்களுடைய பதவியின் மீதும் தங்கள் எதிர்காலத்தின் மீதும் நாடு விழுந்திருக்கின்ற பொருளாதர வீழ்ச்சியிலிருந்தும் தப்பித்துக்கொள் வதற்கும் எடுக்கும் முயற்சியாகும்.

இவர்களோடு எந்த நம்பிக்கையில் தமிழ்தலைமைகள்பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளனர் என்பதுவே தமிழர்களின் கேள்வி. அத்தோடு எதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு வரிந்துகட்டிக்கொண்டுநிற்கின்றார்கள்? தந்திர நரிகளோடு பேச்சுவார்த்தைக்குப் போய் இறுதியில் துண்டைக் காணோம், துணியை காணோம் என ஓடிவரும் நிலையே ஏற்படும்.

சம்பந்தன் தலைமையிலான குழுவினர் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுகின்றார்கள்என்றால்தமிழர்களின் குரலாக, அரசியல் அபிலாகைளின் இலக்கோடு பங்குபற்ற வேண்டும். அதற்கான கலந்துரையாடல்களை மக்கள் மத்தியில் நடத்த வேண்டும். அதற்கான திராணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை. இதுவரை காலமும்அவர்கள்அவ்வாறுசெய்யவும் இல்லை. ரணிலின் அவசரத்துக்கு மத்தியில் இவர்கள் அதனைச் செய்யவும் முடியாது. செய்யப்போவதும் இல்லை – என்றுள்ளது.

## உப்புச் சப்பற்ற......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தீர்வுக்கான பேச்சில் எம்மை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்படுவோம். நாம் தமிழ் மக்களின் பிரதிநிதிகள். அவர்களின் விருப்பங்களை – கோரிக்கைகளை நாம் நிறைவேற்றியே ஆக வேண்டும். தமிழ் மக்கள் சார்பான கோரிக்கைகளையே ஜனாதிபதியிடம் கடந்த சந்திப்புகளில் முன்வைத்துள்ளோம். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவது அரசின் கடமை – என்றும் சம்பந்தன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

தமிழர் தீர்வுக்கான பயணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் செயற்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு பேச்சு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இன்று மாலை சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். இந்தநிலையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இன்று மாலை 5 மணியளவில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரும் பங்குபற்றுவர் என அறியமுடிகின்றது. இதேவேளை, இந்தச் சந்திப்பில் அரச தரப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அமைச்சர்களான அலி சப்ரி, விஜயதாஸ ராஜபக்ச, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் பங்கேற்பர் என்று கூறப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.01.2023 இல் வெளியிடப்பெற்றது.